Vol. 9 No. 4

புரட்டாசி-மார்கழி ௨௦௫௨
October - December 2021

ISSN : 2321-984X

Chief Editor
Dr. M. Sadik Batcha

Advisory Editor
Dr. N. Chandra Segaran

Editorial Board
Dr. MAM. Rameez
Dr. Jeyaraman
Dr.A. Ekambaram
Dr. G. Stephen
Dr. S. Chitra
Dr. S.Senthamizh Pavai
Dr. Aranga. Pari
Dr. A. Shunmughom Pillai
Dr. P. Jeyakrishnan
Dr. S. Easwaran
Dr. Kumara Selva
Dr. A. Palanisamy
Dr. Ganesan Ambedkar
Dr. Kumar
Dr. S. Kalpana
Dr. T. Vishnukumaran
Dr M. N. Rajesh
Dr. M. Ramakrishna
Dr. Govindaraj
Dr. Uma Devi
Dr. Senthil Prakash
Dr. M. Arunachalam
Dr. S. Vignesh Ananth
Dr. Pon. Kathiresan
Dr. S. Bharathi Prakash

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

மறு அச்சு

*Published by*

**RAJA PUBLICATIONS**

No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.
Mobile : 9600535241
Website : www.rajapublications.com

30 பகுதி-3
Part -3

# நான்மணிக்கடிகையில் சமூக அறிவியல் சிந்தனைகள்

**பா. ஜெயந்தி**
முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண் : 19221174022009, தமிழ் உயராய்வு மையம், ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, திருநெல்வேலி. (திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக அங்கீகாரம் பெற்றது), தமிழ்நாடு, இந்தியா.

**முனைவர் சு. உமா**
நெறியாளர், இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி, மேலப்பாளையம். (திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக அங்கிகாரம் பெற்றது), தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச்சுருக்கம்:**

பழந்தமிழர்கள் அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்கினர். அவர்களின் அறிவியல் அறிவானது நமக்கு மிகவும் தெளிவினைக் கற்றுத்தருவதாக அமைந்திருக்கின்றது. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான நான்மணிக்கடிகையில் இடம்பெறுகின்ற சமூக அறிவியல் சிந்தனைகளை விளக்குவதாக இவ்வாய்வு அமைகின்றது. இவ்வாய்வு, கீழ்க்கணக்கு விளக்கம், கீழ்க்கணக்கு நூல்கள், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் வகைப்பாடு, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் காலம், நான்மணிக்கடிகை, சமூக அறிவியல், நான்மணிக்கடிகையில் சமுதாயச் சிந்தனைகள், தமிழ்ச் சமூக மரபும் மாற்றமும், நல்லோரியல்பு, நல்லோரியல்பு, நல்லுணர்வு நெறி, நல்லொழுக்கம், தழிவுநிலை, பெருமை, சிறப்பின் நிலை, நன்மக்கள், மறுமைப்பயன், தொகுப்புரை ஆகிய பக்கத்தலைப்புகளில் விளக்கப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து மேற்கோள் குறிப்புகள் இடம்பெறுகின்றன.

**திறவுச் சொற்கள் :**

பதினெண்கீழ்க்கணக்கு, அறம், நான்மணிக்கடிகை, சமூகவியல்

**முன்னுரை**

உலக மக்கள் வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகளைப் பல இலக்கியங்கள் கூறியுள்ளன. அவற்றுள் மிகச்சிறந்த இலக்கியங்களாகப் போற்றப்படுவது அரஇலக்கியங்களே, அற இலக்கியங்கள் மனிதன் வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய நன்மை பயக்கும் நெறிகளை வலியுறுத்துகின்றன. நீதி என்பது வழிமுறைகளைத் தெரிவிப்பது எனப் பொருள்படுகிறது. அறம் என்பது மிகப் பழங்காலத்திலிருந்தே தமிழில் வழங்கப்பட்டு வரும் சொல்லாக விளங்குகிறது.

**கீழ்க்கணக்கு**

பல்வேறு நூல்வகைகளுக்கும் இலக்கணம் கூறும் பாட்டியல் நூல்கள் பிற்காலத்தில் தோன்றின. பன்னிருபாட்டியல் என்பது அவற்றுள் ஒன்று. அது ஆசிரியப்பா, கலிப்பா, பரிபாடல் ஆகிய பாவகைகளில் மிகுதியான அடிகள் கொண்டனவாக ஐம்பது முதல் ஐந்நூறு பாடல்களைத் தொகுத்தமைப்பது மேற்கணக்கு என்று கூறுகின்றது. அதுவே, வெண்பா யாப்பினைப் பயன்படுத்தி, குறைவான அடிகளால் ஐம்பது முதல் ஐந்நூறு பாடல்களைக் கொண்டு விளங்குவது கீழ்க்கணக்கு என்றும் கூறுகிறது. இதனால் பாட்டிலுள்ள அடிகளின் மிகுதியும் குறைவுமே மேல், கீழ் என்ற அடைமொழிகளால் விளக்கப்பட்டன என்பது விளங்கும். இடைக்காலத்தில் எழுந்த நூல்களிலும், உரைகளிலும் - கீழ்க்கணக்கு என்று அடையில்லாமலும், பதினெண்கீழ்க்கணக்கு என்று அடையோடும் இவை குறிக்கப்படுகின்றன.

"நன்னூல் உரையாசிரியர் மயிலைநாதரும், நச்சினார்க்கினியரும் பதினெண்கீழ்க்கணக்கு என்ற குறியீட்டைக் கையாள்கின்றனர். எனவே இந்த வழக்கு, கி.பி. 13, 14 ஆம் நூற்றாண்டுகளுக்கு உரியது என்பது விளங்குகின்றது. இதனால் பாட்டிலுள்ள அடிகளின் மிகுதியும் குறைவுமே மேல் கீழ் என்ற அடைமொழிகளால் விளக்கப்பட்டன என்பது விளங்கும். இடைக்காலத்தில் எழுந்த நூல்களிலும், உரைகளிலும் - கீழ்க்கணக்கு என்று அடையில்லாமலும், பதினெண்கீழ்க்கணக்கு என்று அடையோடும் இவை குறிக்கப்படுகின்றன.

**"மூத்தோர்கள் பாடியருள் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் கேடில் பதினெட்டுக் கீழ்க்கணக்கும்"**

என்பது தமிழ்விடுதூது. நன்னூல் உரையாசிரியர் மயிலைநாதரும், நச்சினார்க்கினியரும் பதினெண்கீழ்க்கணக்கு என்ற குறியீட்டைக் கையாள்கின்றனர். எனவே இந்த வழக்கு, கி.பி. 13, 14 ஆம் நூற்றாண்டுகளுக்கு உரியது என்பது விளங்குகின்றது."[1]

**கீழ்க்கணக்கு நூல்கள்**

சங்க காலத்தை அடுத்து வந்த காலகட்டத்தில் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் தோன்றியுள்ளன. நான்கு அல்லது ஐந்து அடிகளில் பாடப்பட்ட வெண்பா இனப்பாக்களால் இவை பாடப்பட்டுள்ளன. குறைந்த அடிகளைக் கொண்டு பாடப்படுவதனால் இதனை கீழ்கணக்கு நூல்கள் என்கின்றனர். இதில் ஒரே போக்கான நீதிக் கருத்துக்கள் கையாளப்படுகின்றன. பழைய வெண்பா ஒன்று.

**"நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணைமுப் பாலகடுகம் கோவை பழமொழி - மாமூலம் இன்னிலைய காஞ்சியுடன் ஏலாதி என்பவே கைந்நிலையை வாம்கிழ்க் கணக்கு"[2]**

இப்பாட்டின்படி, இத்தொகுப்பில் அடங்கும் பதினெட்டு நூல்களின் பெயர்குள் பின்வருமாறு, நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்று ஐம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, கைந்நிலை. மேலே காட்டிய வெண்பாவில் ஒரு பாடவேறுபாட்டைப் புகுத்தி, கைந்நிலையின் இடத்தில் இன்னிலை என்ற நீதி நூலை வைத்துச் சொல்வதும் உண்டு. எனினும் கைந்நிலையே பெரும்பாலோருக்கும் உடன்பாடானது.

**பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் வகைப்பாடு**

இப்பதினெட்டு நூல்களையும்,

1. நீதி உரைப்பவை - அறம் பற்றியன - 11 நூல்கள்
2. காதலைச் சிறப்பிப்பவை – அகம் பற்றியன- 6 நூல்கள்
3. போர் பற்றியது – புறம் பற்றியது – 1

என மூன்று பிரிவுகளுள் அடக்கலாம்.

**பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் காலம்**

பதினெண்கீழ்க்கணக்கு என்னும் தொகுதியில் அடங்கும் தனித்தனி நூல்களின் காலத்தை வரையறுப்பது எளிதன்று. எனினும், இவற்றை இருண்ட காலத்துக்கு உரியன என்று பொதுவாகச் சுட்டுகின்றனர். கி.பி. 3ஆம் நூற்றாண்டின் இறுதி முதல் 6ஆம் நூற்றாண்டு வரை அமைந்துள்ள காலம் இருண்ட காலம் எனப்படுகிறது.

**நான்மணிக்கடிகை**

பதினென் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று 'நான்மணிக்கடிகை' பாடுபொருளின் அளவால் நான்மணிக்கடிகை எனப்பெற்றது. அறமுரைக்கும் பதினெட்டு நூல்களுள் நான்மணிக்கடிகையும் ஒன்று. நான்மணிக்கடிகை என்பதற்கு நான்கு மணிகள் பதித்த நகை என்பது பொருள். ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு அணிகலன். ஒவ்வொரு அணிகலனிலும் நான்கு

இரத்தினங்கள் பதித்து வைத்தாற்போல நான்கு கருத்துக்கள் இடம்பெறுகின்றன. 104 வெண்பாக்கள் உள்ளன. 'கடிகை' என்பது 'துண்டம்' எனப் பொருள்படுகின்றது. இங்கு 'நான்கு இரத்தினத் துண்டங்கள்' எனும் பொருளைத் தருவதாகவும் அமைகின்றது. இந்நூலை இயற்றியவர் 'விளம்பி நாகனார்', இன்றைய சமுதாயம் மேம்படவும், வருங்காலம் ஒளிபொருந்தியதாக அமையவும் விளம்பி நாகனார் உணர்த்தும் அறக்கருத்துக்கள் பெரிதும் துணைபுரியக் கூடியவையாக உள்ளன.

**சமூக அறிவியல்**

சமூக அறிவியல் (Social Science) என்பது சமூகவியல் (Sociology) என்றும் அழைக்கப் பெறுகின்றது. சமூகவியல் என்பது மனித சமூகம், சமூக உறவுகள், சமூக நடத்தைகள், சமூக அமைப்பு முறை, சமூக வாழ்க்கை முறை ஆகியவற்றை அறிவியல் நோக்கில் ஆயும் ஓர் இயல் ஆகும்.[3] இது சமூக ஒழுங்கு, ஒழுங்கின்மை, மாற்றங்கள் ஆகியவை பற்றிய அறிவுத் தொகுதியை உருவாக்கும் நோக்கில் செயல்முறை ஆய்வுகளையும்,[4] பகுப்பாய்வு முறைகளையும்[5] பயன்படுத்தும் ஒரு சமூக அறிவியல் ஆகும். மனிதர்கள் சார்ந்து வாழும் சமூக விலங்குகள். அதாவது மனிதர்களின் அனேக செயல்பாடுகள் பிற மனிதருடன் சேர்ந்தே அமைகின்றன. ஆகையால் சமூகவியலின் முக்கிய ஆய்வுப் பொருளாக சமூகம் அல்லது மக்கள் குழு அமைகின்றது. சமூகம் தனிமனிதனை எப்படி பாதிக்கின்றது, தனிமனிதன் சமூகத்தை எப்படி பாதிக்கின்றான் என்பதும் சமூகவியலின் ஆய்வுக் களமே.

**நான்மணிக்கடிகையில் சமுதாயச் சிந்தனைகள்**

முரண்பாடுகள் நிறைந்த சமுதாயத்தில், ஏற்றத்தாழ்வுகளும் இருக்கும் நிலையில், அறங்கள் பெறும் இடம் குறித்த சிந்தனை நான்மணிக்கடிகையில் வலியுறுத்தப்படுகின்றன. இதில் நல்லோரியல்பு, நல்லுணர்வு, நல்லொழுக்கம், நடுவுநிலை, பெருமை, சிறப்பான நிலை, நன்மக்கள், மறுமைப்பயன் குறித்த சமுதாய முன்னேற்றத்திற்கு அடித்தளமான சிந்தனைகள் கையாளப்பட்டுள்ளமையை அறிய முடிகின்றது.

**தமிழ்ச் சமூக மரபும் மாற்றமும்**

நல்லோர் இயல்பானது உலக மக்களால் நன்கு ஏற்றுக்கொள்ளப்பெற்றும், விரும்பப் பெற்றும் அன்றாட வாழ்க்கையில் உண்மையென எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டும் அமைகின்றன. மனிதன் அடையவிருக்கும் புகழானது உலகிற்குத் தேவையான அறச் செயல்களே. தனியொரு மனிதனுக்கு வாழும் காலத்தில் நலன் தரக்கூடியது 'நல்லோரின் இயல்பு' எனப் பெரியோர் கூறுவர். நற்குடியில் பிறந்தோர் தமக்குத் துணையாக உள்ள உறவினரையும் பிரிந்து வாழமாட்டார்கள். நற்குணமுடையோர் தம்மோடு இருப்பாரேயானால் அவர் பொருட்டு நன்மையே விளையும். நல்லோரின் முகம் காட்டும் குறிப்புகளைக் கொண்டு அவனுடைய மனத்தில் உள்ள விருப்புகளை அறியலாம். நல்லோர் மற்றவர் அறியாத போதும் தீங்கு செய்யமாட்டார். தன் செல்வம் அழிந்தாலும் நல்லோர் தம் இயல்பினின்று தாழ்ந்து போகமாட்டார். பிறருடைய செல்வத்தையும் விரும்பமாட்டார்.

**நல்லோரியல்பு**

**"கைத்து இல்லார் நல்லவர், கைத்து உண்டாய்க் காப்பாரின்**
**வைத்தாரின் நல்லர், வறியவர் பைத்து எழுந்து**
**வைதாரின் நல்லர், பொறுப்பவர் செய்தாரின்**
**நல்லர் சிதையாதவர்."** (பா. 67)

செல்வமிருந்தும் அச் செல்வத்தால் பயனடையாதவர்களை விட செல்வமில்லாதவர்கள் நல்லவர்கள். செல்வத்தைச் சேர்த்துவைத்து இழப்பவரை விட வறியவர் மிக நல்லவர். சினந்து வைபவர்களை விட அதனைப் பொறுப்பவர் மிகவும் நல்லவர். பிறருக்கு உதவியவரை விட செய்ந்நன்றியை மறவாதவர் மிக நல்லவர் என்ற நான்மணிக்கடிகைப் பாடல் நல்லோரின் இயல்பு நிலையை உணர்த்துவதாக அமைகின்றது.

## நல்லுணர்வு நெறி

நற்குணங்கள் பலவற்றைக் கொண்டுள்ள சான்றோர், தங்கள் உயர்வுக்குப் பொருந்தாத பழிச்சொற்களைக் கேட்கும்நிலை வந்தால் உயிரையே விடுவர். இத்தகைய நிலை நல்லோர் உணர்வு எனப் போற்றப்படுகிறது. வறுமையில் வாடுபவர்களுக்குச் சிறப்பினைத் தருவதும், வறுமையோடு வாழ்கின்ற காலத்தில் நல்வழி நடத்தலும் உணர்வின் தன்மையை ஈடேற்றுகின்றன என்கிறது நான்மணிக்கடிகைப் பாடல்.

**"வன்கண் பெருகின், வலி பெருகும் பால்மொழியார்**
**இன்கண் பெருகின் இனம்பெருகும் சீர் சான்ற**
**மென்கண் பெருகின், அறம் பெருகும் வன்கண்**
**கயம் பெருகின், பாவம் பெரிது."** (பா. 90)

அஞ்சாமை மிகுந்தால் வலிமை மிகும். மனையாள் மாட்டுக் கருணை மிகுந்தால் இனம் பெருகும். அருள் மிகுந்தால் அறம் மிகும். கீழ்மைக் குணம் மிகுந்தால் தீவினை மிகும் என்று இப்பாடல் கருத்துரைக்கின்றது.

## நல்லொழுக்கம்

சமுதாய உணர்வுகளான, மனமாக இன்மை, அழுக்காறு, பேராசை, கோபம், டுஞ்சொல் ஆகியவற்றை நீக்குதற்பொருட்டு அமைவது நல்லொழுக்க நெறியாகும். ஒழுக்கத்திலும் அறிவிலும் சிறந்த சான்றோர்களைப் பெற்ற அவையானது. தான் பெற வேண்டிய சிறப்பினைப் பெற்று அமையும். ஒழுக்கம் இல்லாமல் வாழும் பொய்யான வாழ்க்கையானது வாழ்க்கையை முற்றிலுமாக அழித்துவிடும் நல்லொழுக்கமானது வாழ்க்கையை நெறிப்படுத்துவதாக அமையும். இதனை.

**"மொய் சிதைக்கும், ஒற்றுமை இன்மை ஒருவனைப்**
**பொய் சிதைக்கும், பொன் போலும் மேனியை பெய்த**
**கலம் சிதைக்கும், பாலின் சுவையைச் குலம் சிதைக்கும்,**
**கூடார்கண் கூடிவிடின்."** (பா.21)

ஒற்றுமை இன்மை ஒருவனது வலிமையை ஒழிக்கும். பொய் பேசும் பண்பு உடம்பை அழிக்கும். பால் வைக்கப்பட்ட அசுத்தமான பாண்டம் பாலின் சுவையைக் கெடுத்துவிடும். அது போன்று தீய நட்பு தன் குலத்தையே அழித்து விடும் என்று நான்மணிக்கடிகை பாடல் உணர்த்துகின்றது. நண்பர், பகைவர், அயலோர் ஆகிய மூவரிடத்தும் நீதி கூற வேண்டியதாயின் நன்மையாகப் போற்றப்படுகிறது. அறம் கூறுகின்ற அவையத்தில் ஒரு சார்பாக நீதிக்கருத்தினை உரைத்தல் கூடாது. நடுவுநிலையோடு நிதியினை கூறல் வேண்டும் வாழும் நாள் தொடரும் என்றால் அதுவே வாழும் மக்களின் உயிர்க்கும், வாழ்க்கைக்கும் இறுதி எல்லையாக அமைந்துவிடும். அதனால் வாழ்க்கையில் ஒரு தலையாக சாராத பண்பு சிறப்பாக வைத்துப் போற்றப்படுகிறது.

## கழிவுநிலை

**"பொய்த்தல் இறுவாய, நட்புக்கண் மெய்த்தாக**
**முத்தல் இறுவாய்த்து, இள நலம் தூக்கு இல்**
**மிகுதி இறுவாய, செல்வங்கள் தம் தம்**
**தகுதி இறுவாய்த்து, உயிர்."** (பா. 17)

நண்பர்கள் பொய் கூறும் இயல்பைப் பெறுவாராயின் அவர்களின் நட்புக் கெடும். மூப்பு தோன்றும் போது இளமை அழிந்துவிடும். மிகையான செயல்களைச் செய்யும் போது செல்வம் அழியும். வாழ்நாள் எல்லை கடந்ததும் உயிரும் அழியும் என்று நான்மணிக்கடிகை பாடல் அமைகின்றது. மற்றவரின் வறுமை நிலைக்கண்டு இல்லா கருதாதவர் தடுவுநிலை மாறாக அறெநெறியில் வாழக்கூடிய நற்பண்பினை உடையவராவர் பிறந்து வளர்ந்து குடும்பத்தைத் தாங்குவோர் நடுவுநிலைப் பண்பு தவறாதவராக இருப்பார் என்பது இதன்வழி தெளிவாகின்றது.

## பெருமை

குடும்பம் ஒன்றுகூடி வாழ்வதற்குத் தேவையான நல்ல செயல்களை முயன்று செய்வது குடும்பப் பெண்ணிற்கு பெருமைக்குரிய நலனாகும். பணிவுடனிருத்தல்

பெருமையுடையோரின் இயல்பு வழிவழியாக போற்றிவரும் வாழ்வியல் நெறிகளைப் பேணிக்காத்தல் மட்டுமின்றி வாழும் வாழ்க்கை அவள் இல்லாக் காலத்திலும் சுட்டும் வகையில் அமைந்திடல் வாழ்விற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

**"நீரான் வீறு எய்தும், விளை நிலம் நீர் வழங்கும்**
**பண்டத்தால் பாடு எய்தும், பட்டினம் கொண்டு ஆளும்**
**நாட்டான் வீறு எய்துவர், மன்னவர் கூத்து ஒருவன்**
**பாடலான் பாடு பெறும்."** (பா. 83)

விளைநிலம் நீர்ப்பாய்ச்சலாற் செழிப்படையும். துறைமுகப் பட்டினங்கள் கடல் வளத்தால் பெருமையடையும். மன்னர் தாம் ஆளும் நாட்டினாற் சிறப்படைவர். கூத்து வல்லவனால் நாடகம் சிறப்படையும் என்று வரையறுத்துள்ளனர்.

**சிறப்பின் நிலை**

எப்போதும் எளிமையாக நட்பு கொள்ளுதல், இனிமையான கலந்துரையாடல், யாரிடத்தும் அன்புடனிருத்தல், பிறந்த உயர்குடிக்கு ஏற்ப வாழ்தலும் சிறப்பான நிலையினை எடுத்துரைக்கின்றன. வீட்டு நெறியின் தன்மைகளை ஆராய்ந்து துறவு வாழ்க்கையை மேற்கொண்டோரின் பெருமையினைப் போன்று சிறப்பான நிலை வேறொன்றுமில்லை.

**"போதினான் நந்தும், புனை தண் தார் மற்று அதன்**
**தாதினான் நந்தும், சுரும்பு எல்லாம் தீது இல்**
**வினையினான் நந்துவர், மக்களும் தம்தம்**
**நனையினான் நந்தும், நறா.** (பா. 47)

மாலை பூவினால் விளங்கும். வண்டுகள் அப்பூவில் உள்ள தேனாற் பொலியும். நற்செயல்களால் மக்கள் பொலிவர். தேன் தாமிருக்கும் மலர் வகைக்கு ஏற்பப் பெருகி இனிக்கச் செய்யும் என்று இப்பாடல் அமைகின்றது. தம்மை விரும்பித் தம்மிடம் வந்து சேர்ந்தவர்களில் விருப்பதினையும், உறவினர்கள் உணர்விற்காக வைத்திருக்கும் உணவுப் பொருளை அழிக்காமலும், உழைத் தொழிலுக்குத் தீமை செய்யாமலும் இருப்பது உயர்ந்தோர் கடைபிடிக்கும் சிறப்பான நிலையாகும். செய்யக்கூடிய செயல்களை குற்றங்கள் ஏற்படாமல் ஆராய்ந்து செய்தலும், தெளிவான முடிவு எடுப்பதும் சிறப்பான நிலையாக போற்றப்படுவதாக அமைகின்றன.

**நன்மக்கள்**

ஒருவன் தான் பெற வேண்டியவற்றுள், அறிய வேண்டியவற்றை அறியத் தகுந்த மக்களைப் பெறுவதன்றி சிறந்தது ஒன்றுமில்லை. நன்மக்களைப் பெறுகின்ற செல்வமானது அவரவர் செய்கின்ற நல்வினையின் பயனாய் அமைகின்றது. பிறர் செய்த நன்மைகளை மனதில் வைத்துப் போற்றுதலும், தம்மிடமிருந்து தமக்கும் பிறர்க்கும் துன்பம் தருகின்ற கோபத்தினை விடுத்தலும், ஒருவர் செய்த தீமையை எண்ணி மனம் கலங்குவதனை விடுத்தலும் நன்மக்களின் நிறமாக அமைகின்றன.

**"சாவாத இல்லை, பிறந்த உயிர் எல்லாம்**
**தாவாத இல்லை, வலிகளும் மூவா**
**இளமை இயைந்தாரும் இல்லை வளமையில்**
**கேடு இன்றிச் சென்றாரும் இல்."** (பா. 76)

பிறந்த உயிர்கள் எல்லாம் இறவாதன இல்லை. கெடாத வலிமைகளும் இல்லை. மூவாத இளமைகளும் இல்லை. குறையாத செல்வங்களும் இல்லை என்ற பாடல் உணர்த்துவதாக அமைகின்றது.

**மறுமைப்பயன்**

பற்றற்ற நிலையே வீடுபேற்றை அளிக்கும். இளமையிலேயே அறம் செய்தல் மறுமைக்கு நன்மை பயக்குமாம். விரும்பாமையைவிட சிறந்த செல்வம் வேறெங்கிலுமில்லை. உலகில் பிறந்து துன்பங்களில் உழன்று இறந்து மீண்டும் பிறவி எடுக்காமல் பிறவா வரமாகிய வீடுபேற்றினைப் பெற தவநெறியில் நிற்றல் அவசியமாகும். இதனைக் கீழுள்ள பாடல் வரையறுக்கின்றது.

"மாண்டவர் மாண்ட வினை பெறுப் வேண்டாதார்
வேண்டா வினையும் பெறுபவே யாண்டும்,
பிறப்பால் பிறப்பார் அறன் இன்புறுவர்
துறப்பார், துறக்கத்தவர்." (பா. 56)

அறிவாற் சிறந்தவர்கள் மாட்சிமைப்பட்ட செயல்களையே செய்வர். அறிவிற் குறைந்தவர்கள் தீவினையே செய்வர். உயர்ந்த குடியில் பிறந்தோர் இருமையிலும் (இம்மை, மறுமை) அறத்தையே விரும்பிச் செய்வர். பற்றற்றத் துறவிகள் வீட்டின்பத்தையே (சொர்க்கம்) விரும்புவர்.

## தொகுப்புரை

இவ்வாறு மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான சமுதாயச் சிந்தனைகளை எடுத்துரைக்கும் பாங்கில் தான்மணிக்கடிகையின் பாடல்கள் அமைத்துள்ளன. சமூக அறிவியலின் கூறுகளான, பொருளியல் அறிவியல் (Economics Science), அரசியலறிவியல் (Political Science) போன்ற பல அறிவியல் கூறுகள் இந்நூலுள் பொதிந்துள்ளமையை அறிய முடிகின்றது. மனிதனின் ஒழுக்கமே சமுதாயத்தின் ஒழுக்கம் என்ற அடிப்படையில் நல்லோரியல்பு, நல்லொழுக்கமும், சமுதாயத்தில் நடுவுநிலைத் தன்மையும், அதன் பெருமை குறித்த சிறப்பான நிலையும், நன்மக்கள் நெறிமுறையும், மறுமைப் பயன் குறித்த செய்தியும் இடம்பெறுவதாக அமைகின்றன. பல அறிவியல் துறைகளைப் புகுத்தி ஆய்வு செய்யும் நிலையில் இந்நூல் அமைந்துள்ளமையை அறிந்துகொள்ள முடிகின்றது.

## மேற்கோள் குறிப்புகள்

1. பேரா,அ.தட்சிணாமூர்த்தி, இலக்கிய வரலாறு, தமிழ்இணைய கல்விக் கழகம். A0411. 3.1)
2. சங்க இலக்கியம், பதினெண்கீழ்க்கணக்கு, நானாற்பது உரையுடன், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு, *1962*, ந. மு. வேங்கடசாமி நாட்டார் முகவுரை, பக்கம் *5*
3. sociology. (n.d.). The American Heritage Science Dictionary. Retrieved 13 July 2013, from Dictionary.com website: http://dictionary. reference.com/browse/sociology http://www.dummies.com/how-to/content/sociology-for-dummies-cheat-sheet.html

   http://www.pasadena.edu/studentservices/counseling/graduation/documents/aa-t_sociology.pdf

   http://www.asanet.org/introtosociology/Documents/Field%20of%20sociology 033108. htm#whatissociology
4. Sociological theory: Classical statements (6th ed.). Boston, Massachusetts, US: Pearson Education. 2005. gf;. 3–5, 32–36.
5. Sociological theory: Classical statements (6th ed.). Boston, Massachusetts, US: Pearson Education. 2005. gf;. 3–5, 38–40.

நவீனத் தமிழாய்வு
(பன்னாட்டுக் காலாண்டு ஆய்விதழ்)

Journal of **Modern Thamizh Research**
(A Quarterly International Journal)

தொகுதி-9 எண் 4
Vol. 9 No. 4

புரட்டாசி-மார்கழி 2052
October - December 2021

ISSN : 2321 - 984X



Chief Editor
Dr. M. Sadik Batcha

Advisory Editor
Dr. N. Chandra Segaran

Editorial Board
Dr. MAM. Rameez
Dr. Jeyaraman
Dr.A. Ekambaram
Dr. G. Stephen
Dr. S. Chitra
Dr. S.Senthamizh Pavai
Dr. Aranga. Pari
Dr. A. Shunmughom Pillai
Dr. P. Jeyakrishnan
Dr. S. Easwaran
Dr. Kumara Selva
Dr. A. Palanisamy
Dr. Ganesan Ambedkar
Dr. Kumar
Dr. S. Kalpana
Dr. T. Vishnukumaran
Dr M. N. Rajesh
Dr. M. Ramakrishnan
Dr. Govindaraj
Dr. Uma Devi
Dr. Senthil Prakash
Dr. M. Arunachalam
Dr. S. Vignesh Ananth
Dr. Pon. Kathiresan
Dr. S. Bharathi Prakash


30 பகுதி-3 Part -3

# சான்றிதழ் Certificate

*This is to certify that Dr. / Mr. / Ms.*

பா. ஜெயந்தி
முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண் : 19221174022009, தமிழ் உயராய்வு மையம்,
ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, திருநெல்வேலி.
(திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக அங்கீகாரம் பெற்றது), தமிழ்நாடு, இந்தியா.

முனைவர் சு. உமா
நெறியாளர், இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி, மேலப்பாளையம்.
(திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக
அங்கிகாரம் பெற்றது), தமிழ்நாடு, இந்தியா.

*has Published a paper titled*

நான்மணிக்கடிகையில் சமூக அறிவியல் சிந்தனைகள்

Sl.No. 141 150
Pages : 996-1001


Published by
**RAJA PUBLICATIONS**
No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.
Mobile : 9600535241
Website : www.rajapublications.com



Chief Editor
**Dr. M. Sadik Batcha**
Associate Professor
PG and Research Department of Thamizh
Jamal Mohamed College (Autonomous)
Tiruchirappalli - 620 020, Tamil Nadu, India
Mobile : 94434 17242, Email : ms_batcha@yahoo.co.in

| | | | |
|---|---|---|---|
| 101. | ஜெ.பூங்கொடி & செ.தனம் | தீபம் நா.பார்த்தசாரதி நாவல்களில் "இளைஞர் சமுதாயம்" | 717-725 |
| 102. | இரா. வெங்கடேஷ் | இலக்கியங்களில் நிர்வாகச் சிந்தனைகள் | 726-733 |
| 103. | மு. பவித்ரா & ம. வனிதா | நற்றிணையில் குறிஞ்சி நில மக்களின் வாழ்வியல் கூறுகள் | 734-737 |
| 104. | ஆ. ராஜா, த. ஆதித்தன் & சி. வேல்முருகன் | அகஸ்தீஸ்வரம் அமைப்பும் தொன்மையும் | 738-742 |
| 105. | கி.இரமேஷ் & சே.மகாலட்சுமி | நிலவைத்தேடும் வானம் நாவலில் சமுதாயம் | 743-748 |
| 106. | க.சீதாலெட்சுமி & அ.சுந்தரம் | சித்திரை விசு விழாவில் சமூக உறவுகள் (பாபநாசம்) | 749-753 |
| 107. | பி. இந்திராணி & பா. வைடூரியம்மாள் | பாலைநில மக்கள் கொண்டாடிய விழாக்கள் | 754-758 |
| 108. | SUBAL TANDI & RABINDRANATH SARMA | IMPACT OF DAM-INDUCED DISPLACEMENT ON HIGHER EDUCATION | 759-768 |
| 109. | சண்முகம் குமாரசாமி & ப. மணிமாறன் | பாவேந்தர் பாரதிதாசனின் கவிதைகளில் மொழிபெயர்ப்பு செயல்முறைகளும் உத்திகளும் | 769-775 |
| 110. | அ.மா. முகமது ஹாரிஸ் | இசுலாமிய இறையியலில் ஓர் இறைத்தத்துவம் | 776-785 |
| 111. | GOVIND KUMAR ROHIT & RABINDRANATH SARMA | MID-DAY MEAL IN PRIMARY EDUCATION: A SOCIOLOGICAL STUDY | 786-791 |
| 112. | இ.சௌந்தர்யா& மு.கல்பனா | நாலிரண்டில் ஒற்றுமை | 792-796 |
| 113. | ம.வளர்மதி &ச.கௌ.கவிதா | செந்தமிழ்ச் செல்வி இதழின் தமிழ்ப் பணி | 797-801 |
| 114. | சி. வீரமணி | தமிழ் அகரமுதலிகளின் வரலாறும் வளர்ச்சியும் | 802-810 |
| 115. | அ. ஜனார்த்தலி பேகம் | குறுந்தொகையில் தொழில்களும் வளர்ச்சி நிலைகளும் | 811-819 |
| 116. | MAHESHBABU. N, MADHUSHREE S&RAKESH.T.S. | IMPACT OF POST COVID-19 LOCKDOWN ON LIFE SATISFACTION AND MENTAL HEALTH OF COLLEGE STUDENTS | 820-826 |
| 117. | கி.லாவண்யா & ஆ.வேணிஸ்ரீ | தொல்காப்பியம் காட்டும் மொழியியல் | 827-8 |
| 118. | V. PANDURANGAN & S. SEKHAR | EFFECT OF RELAXATION AND WALKING ON SELECTED PSYCHOLOGICAL VARIABLE AMONG EXPECTED FATHERS | 832- |
| 119. | V.S.VASUMATHI &S.SEKAR | மெய்யியலும் வேதாத்திரி யோகமும் | 838-84 |
| 120. | AMIT SHANKER & RAVI KANT | READINESS OF SPECIAL TEACHERS IN USING ASSISTIVE TECHNOLOGY: HOW MUCH TEACHERS OF BIHAR ARE READY? | 44-851 |
| 121. | VISHAL KUMAR | AWARENESS OF HIGHER EDUCATION STUDENTS TOWARDS OOCs | -858 |
| 122. | பு.ஹேமாவதி& த.கலாஸ்ரீதர் | தஞ்சாவூர் வட்டார இயற்கை அமை களும், ஆறுகளு | 862 |
| 123. | தி. உமாதேவி | துளசி வழிபாடு | 8 71 |
| 124. | MUKESHWAR SONWANI & SANJIV KUMAR LAVANIA | A STUDY ON CURRENT ST OF INTE LLY PLACED TRIB (WITH SPECIAL REFERENCE TRIBAL C MUNI DISPLACEL Y VARIOUS DEVELOPMENT PR CTS IN I GARH, HATTISGARH | 87 |
| 125. | S.SAMEENA & P.KUMARESAN | IRULAR TRIBE LANGUAGE A CULTU ENDANC MENT | 878-884 |
| 126. | வெ.சரண்யா&ஜா.வளர்மதி | சிறுவர் விளையாட்டு புலப்படு ம் முக பண்புகள | 885-890 |
| 127. | ப. நவசக்திவேல் & க. புவனேஸ்வரி | மார்க்சிய சூழலியல் கோட்பாட நோக்கில் முகிலின | 891-897 |
| 128. | THANGAPERUM P M. RAJEN A P & R. MANG LESWA | CHILD M E: THE GLOBAL S ARIO WITH SPECIAL REFERENCE TO INDIA | 898-906 |
| 129. | NE S | THE MPACT OF GENDER AND CULT ON DEFINING WOMAN: AN E TEMOLOGICAL EXPOSITIO FROM INDIAN PERSPECTIVES | 907-913 |
| 130. | MAHAL HMI. M & VISWANA AN. C | SKY URO MUSCULAR BREATHING EXERCISE FOR STRENGTHENING IMMUNITY | 914-920 |
| 131. | நா. சந்தி | பருண் முதியலில் சமகால அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி நிலைகள் | 921-933 |
| 132. | மு.சத்யா & ாம.சு | கவிஞர் ளின் சமூகச் சிந்தனைகள் | 934-939 |
| 133. | சி.இரவிசுந்த & எஸ் சே | ம்மம் - ஓர் ஆய்வு | 940-945 |
| 134. | AVUDAIAPPA K.PERUMAL | OSOPHICAL APPROACH TOWARDS SCIENCE - AN ANALYSIS OF THE CONCEPTS OF VETHATHIRI MAHARISHI AND ALBERT EINSTEIN | 946-953 |
| 135. | மா. சமுத்திரச் | உரையாசிரியர் இளம்பூரணரின் உரைப்போக்கு | 954-957 |
| 136. | ந. தமிழ்மொ | இந்திரன் - மீள்பார்வை | 958-962 |
| 137. | AUGUSTINE GEORGE GEORGE JOSEPH MANOJ T.I & BABU D THATTIL | EFFECT OF BHRAMARIPRANAYAMA ON ZOOM EXHAUSTION AND FATIGUE AMONG UNDER GRADUATE ENGINEERING STUDENTS | 963-975 |
| 138. | த. உமாசெல்வி & வீ. வெற்றிவேல் | தேவாரம் பாடல் பெற்ற தலங்களில் - பஞ்சபூதத் தலங்கள்- ஓர் ஆய்வு | 976-983 |
| 139. | செ. ஓவியம் & கி. மைதிலி | பதினெண்கீழ்க்கணக்கில் பெண்களை முன்வைத்து "விருந்தும் விருந்தோம்பலும்" | 984-990 |
| 140. | V. MANIKANDAN & V. AMBEDKAR | CONSTRUCTION AND STANDARDIZATION OF MATHEMATICAL INTEREST FOR HIGH SCHOOL STUDENTS | 991-995 |
| 141. | பா. ஜெயந்தி & சு. உமா | நான்மணிக்கடிகையில் சமூக அறிவியல் சிந்தனைகள் | 996-1001 |
| 142. | JYOTI GUPTA | CONSTRUCTIVISM AND E-RESOURCES: EVOLVING A NEW PARADIGM IN TEACHING - LEARNING | 1002-1011 |
| 143. | இரா. சண்முகப்பிரியா & ப. வெங்கடேசன் | திருநாவுக்கரசர் தேவாரத்தில் யாப்பமைதி | 1012-1021 |
| 144. | மு. அப்துல் சமது & ஷே. நாகூர் கனி | மொழிநடை நோக்கில் அஞ்சுவண்ணம் தெரு | 1022-1032 |
| 145. | D. ABUL FAZAL & MOHAMMAD OSMAN PASHA | AMBULANCE SERVICES OF TAMIL NADU MUSLIM MUNNETRA KAZHAGAM - AN EFFECTIVE EMERGENCY MEDICAL SYSTEM OF THE PEOPLE, FOR THE PEOPLE AND BY THE PEOPLE - A ROLE MODEL FOR EMULATION | 1033-1040 |
| 146. | இரா.சுப்பிரமணி | வைரமுத்து படைப்புகளில் பண்பாட்டு கூறுகள் | 1041-1045 |
| 147. | ஆ. முனியன் | புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களின் உறவுமுறைச் சொற்கள் | 1046-1051 |
| 148. | அ. கோவிந்தாராஜன் | அகஇலக்கியங்களில் பாவேந்தர் | 1052-1057 |
| 149. | GAYATHRI. B & SHANTHI.T | UPSURGE OF ANGER AND THE SKY YOGIC INTROSPECTION TECHNIQUES TO NEUTRALIZE THE UPSURGE OF ANGER | 1058-1063 |
| 150. | மு.சாதிக்பாட்சா | எஸ்.இராமகிருஷ்ணனின் "பதின்" புதினத்தில் வயதிற்கு மீறிய பதினின் சொற்களும் எண்ண ஓட்டங்களும் | 1064-1070 |


Published by : **Raja Publications,** No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : **The Printing House,** Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121